| 2017 ஆண்டு காலப்பகுதியில் நடுவர்தீர்ப்பு செயற்பாடுகளை நிறைவு செய்த கோப்புக்களின் எண்ணிக்கை | 105 |

## 02. 5.2 நீதிமன்றத்தின் மூலம் நடுத்தீர்ப்பை வலுப்பெறச் செய்தல்

1972 இலக்கம் 5 கொண்ட கூட்டுறவு சங்கச் சட்டம் 58 வது பந்தியில் குறிப்பிடப்பட்டதன் படி கூட்டுறவு சங்கத்தின் மூலம் நடுத்தீர்ப்புக்காக ஒப்படைக்கப்பட்ட பிணக்குகளிற்ககு நடுத்தீர்ப்பு வழங்கியதன் பின் சம்பந்தப்பட்ட தொகை அறவிடப்படவில்லை எனின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் மூலம் அத்தகைய தொகையானது தண்டப்பணத்துடன் அறவிடப்படுவதற்கு உரிய நீதவான் நிதிமன்றத்தின் மூலம் வலுவுட்டல் செய்யப்படுவதுடன் அவ்வாறு நிதிமன்றத்தின் ஊடாக அறவிடப்பட்ட தொகையானது மீள சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத்திற்க்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.

| விபரம் | மொத்தம் |
|---|---|
| 2017.01.31 திகதியில் உள்ளவாறு நிதிமன்றத்தின் மூலம் வலுப்பெறச் செய்வதற்காக உள்ள கோரிக்கை விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 713 |
| 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதிமன்றத்தின் மூலம் வலுப்பெறச் செய்வதற்காக கிடைத்த கோரிக்கை விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 02 |
| 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதிமன்றத்தின் மூலம் வலுப்பெறச் செய்த நடுத்தீர்ப்புக்களின் எண்ணிக்கை | 214 |
| 2017.12.31. திகதியில் உள்ளவாறு நிதிமன்றத்தின் மூலம் வலுப்பெறச் செய்வதற்காக உள்ள கோரிக்கை விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 501 |

## 02. 6 கூட்டுறவு நிதிய முகாமைத்துவம்

1972 இல 05 ஐக் கொண்ட கூட்டுறவச் சட்டத்தின் 43 (1) (ஆ) உறுப்புரை மற்றும் 57 (3) உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்படும் நிதியம் இவ்வாண்டினுள்ளும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொறுப்பில் பேணப்படுவதுடன் அந்நிதியத்தினா் செலவு மற்றும முதலீடு செய்தல் தொடா்பான நடவடிக்கைகள் நிதியக் குழுவின் தீா்மானங்களுக்கேற்ப நிகழ்த்தப்படும். அந்நிதியத்திற்குப் பங்களிப்பு வழங்குகின்ற சங்ங்களிடமிருந்து தொகையை அறவிடுதல், செலவு செய்தல் முதலீடு செய்தல் கடன் மற்றும் நன்கொடை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை கௌரவ அமைச்சின் மேற்பாா்வையின் கீழும் வழிகாட்டலின்கீழும் அமைச்சின் செயலாரின் பங்களிப்புடன் கூடிய நிதியக்குழுவின் தீா்மானத்திற்கு அமைய முகாமை செய்யப்படுகின்றது.

- ❖ கூட்டுறவு நிதியம்
- ❖ கூட்டுறவு மிகை நிதியம்

## 02. 6.1 கூட்டுறவு நிதியம்

கூட்டுறவு சங்கங்களின் சுதந்திரத்திற்கு முன்னரான கட்டளைச் சட்டம் (107வது அத்தியாயம்) 46 பந்தியல் கீழ் உள்ள இல 10086 மற்றும் 1950.03.24 திகதி வெளியிட்டப்பட்ட வா்த்தமானிக்கிணங்க அமைக்கப்பட்ட இந்நிதியமானது கௌரவ அமைச்சரின் வளிகாட்லின் கீழும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளா் மற்றும் பதிவாளரினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது தேசிய திணைக்களத்தின் இந்நிதியத்திற்கான பங்களிப்பு இத்திணைக்களத்தின் கண்காணிப்பு மேற்பாா்வை மூலம் கட்டுப்படுத்தப்படுகின்ற கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் நாடளாவிய ரீதியான செயற்பாட்டை கொண்ட ஆரம்ப கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

## 02. 6.2 கூட்டுறவு மிகை நிதியம்

இலக்கம் 93/5 கெண்ட 1974 ஜனவரி மாதம் 10 திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமனிக்கமைய 44 (1) முதல் 44 (111) வரை குறிப்பிடப்பட்ட பதிவுசெய்யப்பட்ட சங்கங்களை முடிவுறுத்தும் போதான சந்தர்ப்பத்தில் அத்தகைய சங்கத்தின் எதாவது கடன் வழங்கியவர்களுக்கு செத்துக்களை பகிர்ந்தழிக்கும் யோசனையின் கீழ் தனக்கு கிடைக்க வேண்டியவை தொடர்பாக மிதியை பெற்றுக்கொள்வதற்காக நிதி ரீதியான உதவியை வழங்கல் இந்த ஆண்டு காலப்பகுதியில் மாகாண கூட்டுறவு சங்கங்களின் செயற்பாடுகளட முன்னேற்றுவதற்காக சலுகை வட்டிவீதத்தின் அடிப்படையில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது.

## 02. 7 2017 ம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தினுடாக நிதி ஒதுக்கம் மற்றும் செலவினங்களை ஏற்றல் மீண்டெழும் செலவீனங்கள்.

| செலவு விடய இலக்கம் | தொகுதி/ செலவு விபரம்/ விடயங்கள் | தேறிய நிதி ஒதுக்கம் ரூபா. | 2017.12.31ம் திகதியில் மொத்த செலவு ரூ. |
|---|---|---|---|
| 1001 | சம்பளம் மற்றும் ஊதியம் | 29,550,000.00 | 29,363,176.37 |
| 1002 | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளம் | 750,000.00 | 743,819.67 |
| 1003 | ஏனைய கொடுப்பனவுகள் | 19,400,000.00 | 19,361,753.14 |
| 1101 | போக்குவரத்து செலவுகள் - உள்ளாடு | 1,400,000.00 | 1,397,958.87 |
| 1102 | போக்குவரத்து செலவுகள் - வெளிநாடு | 1,200,000.00 | 1,003,611.73 |
| 1201 | எழுதுபொருள் மற்றும் அலுவலக தேவைகள | 1,683,000.00 | 1,682,950.86 |
| 1202 | எரிபொருட்கள் | 1,520,000.00 | 1,473,000.00 |
| 1203 | உணவுப்பொருட்கள் மற்றும் சீருடை | 100,000.00 | 99,939.00 |
| 1301 | வாகனங்கள் | 1,600,000.00 | 1,447,392.52 |
| 1302 | இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும் | 600,000.00 | 548,987.91 |
| 1402 | அஞ்சல் மற்றும் தொலைதொடர்பு | 1,315,000.00 | 1,130,130.65 |
| 1403 | மின்சார மற்றும் குடிநீர் | 3,000,000.00 | 2,681,438.95 |
| 1404 | குத்தகை மற்றும் உள்ளுராட்சி வரி | 950,000.00 | 925,937.94 |
| 1409 | ஏனையவை | 3,180,000.00 | 3,179,951.15 |
| 1505 | ஏனைய உதவி மற்றும் பங்களிப்பு தொகை | 400,000.00 | 394,505.96 |
| 1506 | அரசாங்க ஊழியர்களின் சொத்து கடன் வட்டி | 735,000.00 | 729,828.35 |
| 1701 | நட்டங்கள் மற்றும் பதிவழிப்புக்களும் | 150,000.00 | 144,979.75 |
| | **மொத்தம்** | **67,383,000.00** | **66,309,362.82** |

## மூலதனச் செலவீனங்கள்.

| செலவு விடய இலக்கம் | தொகுதி , செலவு விபரம் ,விடயங்கள் | தேறிய நிதி ஒதுக்கம் ரூபா | 2017.12.31ம் திகதியில் மொத்த செலவு ரூபா |
|---|---|---|---|
| 2002 | இயந்திரங்களும் இயந்தரமயப்படுத்தலும். | 100,000.00 | 89,034.00 |
| 2003 | வாகனங்கள் | 400,000.00 | 36,400.00 |
| 2102 | தளபாடங்களும் உபகரணங்களும் அலுவலக உபகரணங்களும். | 10,350,000.00 | 10,350,000.00 |
| 2103 | இயந்திரங்களும் இயந்தரமயப்படுத்தலும். | 400,000.00 | 398,629.50 |
| 2202-1 | கூட்டுறவு இயக்கம் தெடர்பான பிரச்சாரம் சமூபதீபனி கூட்டுறவு பத்திரிகை பின்னிணைப்பு அச்சிடல் | 5,244,000.00 | 5,244,000.00 |
| 2202-3 | புள்ளிவிபரவியல் அறிக்கை அச்சிடல் | 216,000.00 | 215,548.03 |
| 2202-3 | "நன சக்தி" பாடசாலை கூட்டுறவு சங்கங்களுக்கான மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | 3,258,000.00 | 3,257,207,44 |
| 2202-4 | நிதிசேவை ஒழுங்குபடுத்தல் - கிராமிய வங்கி ஒழுங்குபடுத்தல் | 1,700,000.00 | 1,699,596.17 |
| 2202-5 | கூட்டுறவுக் கிராமக் கருத்திட்டம் | 6,000,000.00 | 6,000,000.00 |
| 2202-6 | கைத்தொழில் மற்றும் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்தல் வேலைத் திட்டடம் | 3,632,000.00 | 3,631,207.40 |
| 2401 | பயிற்சி மற்றும் திறன் விருத்தி | 200,000.00 | 198,225.00 |
| | **மொத்தம்** | **31,500,000.00** | **31,119,847.54** |

## மீண்டெழும் செலவுகள் மற்றும் மூலதனச் செலவுகளுக்கான சுருக்கம்.

| | விபரம் | தேறிய நிதி ஒதுக்கம் ரூபா | 2017.12.31ம் திகதியில் மொத்த செலவு ரூபா |
|---|---|---|---|
| 01 | மீண்டெழும் செலவுகளின் மொத்தம் | 67,383,000.00 | 66,309,362.82 |
| 02 | மூலதனச் செலவுகளின் மொத்தம் | 31,500,000.00 | 31,119,847.54 |
| | **மொத்தம்** | **98,883,000.00** | **97,429,210.36** |

## 02. 8 கிராமிய வங்கி ஒழுங்குபடுத்தல்

| தொடர் இல | செயற்பாடுகள் | அளவியல் அலகு | பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு | அடைவுகள் |
| 01 | கூட்டுறவுச் சங்கங்களின் தரவுகள் மற்றும் தகவல்கள் சேகரித்தல் மற்றும் அத்தரவுகளை நாளது தேதிப்படுத்தல் அல்லது இற்றைப்படுத்தல் | அறிக்கைகளின் எண்ணிக்கை | 36 | 27 |
| 02 | திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகளை விசாரிதல் | விசாரணை நடத்திய பரிட்சிப்புக்களின் எண்ணிக்கை | 08 | 03 |
| 03 | மத்திய அரசின் உத்தியோகத்தர்கள் மாகாண அரசின் உத்தியோகத்தர்கள் மற்றும் சங்கத்திள் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல் | பயிற்சி செயலமர்வுகளின் எண்ணிக்கை | 12 | 10 |
| 04 | கூட்டுறவு வங்கி ஒழுங்குபடுத்தல் தொடர்பான புதிய கைநூல்கள் சுற்று நிருபங்கள் ஆலொசனைகள் மற்றும் சட்ட உருவாக்கம் | தயாரிக்கப்பட்ட சுற்று நிருபங்களின் எண்ணிக்கை | 05 | 03 |
| 05 | தேசிய கூட்டுறவு வங்கி ஒழுங்குபடுத்தல் செயற்குழு கூட்டடத்தை நடாத்துதல் | செயற்குழு கூட்டங்களின் எண்ணிக்கை | 06 | 02 |

## 02. 9 கருத்திட்டங்களை செற்படுத்தல்

### ❖ நனசக்தி பாடசாலை கூட்டுறவு சங்க ஊக்குவிப்பு வேலைத்திட்டம்

நனசக்தி பாடசாலை கூட்டுறவு சங்க ஊக்குவிப்பு மற்றும் மேம்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டு கல்வி பொது தராதர (சாதாரண தரம்) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை இலக்காக கொண்டு வடமேல் ,மேல், கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் மேற்படி பயிற்சிக் கருத்தரங்கு நடாத்தப்பட்டதுடன் அத்தகைய கருத்தரங்குகளில் பங்குபற்றிய மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலையிலுள்ள நூலகங்களுக்கும் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்காக நிதி உதவிகளும் இத்திணைக்களத்தினால் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்நிதி உதவியானது தேசியப்பாடசாலைகளுக்கு ரூபா 50000.00 வும் மாகாணப் பாடசாலைகளுக்கு ரூபா 25000.00 வும் வழங்கப்பட்டது. இவ்வாறு கல்வி பொது தராதர (சாதாரண தரம்) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை இலக்காக கொண்டு நிகழ்ச்சித்திட்டதிற்க்கு மேலதிகமாக 5ஆம் வகுப்பு மாணவர்களை இலக்காக கொண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான கருத்தரங்குகளும் நிகழ்த்தப்பட்டன.

நனசக்தி பாடசாலை கூட்டுறவு சங்க ஊக்குவிப்பு மற்றும் மேம்படுத்தல் வேலைத்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக தேசிய மட்டத்திலான பாடசாலை கூட்டுறவு சங்கங்களை ஆரம்பிப்பதற்காக 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான அத்தியாவசியமான அடிப்படை தகவல்களை வழங்குவதற்காக பாடசாலை கூட்டுறவுச் சங்கங்களை பதிவு செய்வதற்கான மாதிரி துணைவிதிக் கோவைகளை முன்பு குறிப்பிட்ட கருத்தரங்குகள் நடைபெற்ற பாடசாலைகளிற்க்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய மேற்படி பாடசாலை கூட்டுறவுச் சங்கங்களின் ஊக்குவிப்பு மற்றும் மேம்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் குளி/ சென்யோசப் மாகாவித்தியாலயத்தின் பாடசாலை கூட்டுறவுச் சங்கம் தேசிய மட்டத்திலான கூட்டுறவுச் சங்கமாக அபிவிருத்தி செய்வதற்க்கு நிதி உதவி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யவும் உதவிகள் வழங்கப்பட்டது. இது இவ்வாண்டில் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும்.

### ❖ ஜனதாமேவர மக்கள் சேவை

2017 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நாட்டிற்க்கு பாதிப்பை எற்படுத்திய சாதகமற்ற காலநிலை மற்றும் வானிலை காரணமாக எற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களின் காரணமாக பொருமளவிலான மக்கள் இடம்பெயர்விற்க்கு உள்ளாகியிருந்தனர். மேலும் பலர் பலதரப்பட்ட அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சுடன் இணைந்து எமது திணைக்களமானது இரத்தினபுரி மாவட்டத்தின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கியதன் மூலம் இத்திணைக்களமானது தனது சமூக பொறுப்புணர்வை வெளிப்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற கூட்டுறவுச் சங்கங்களும் தத்தமது பிரதேசங்களில் பாதிப்புகுள்ளான மக்களுக்கு பலதரப்பட்ட உதவிகளை வழங்கி கூட்டுறவுத்தறையானது மக்கள் நலன்புரி நடவடிக்கைகளில் இருந்த கடமையுணர்வையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியிருந்தது.

### ❖ 95ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினக் கொண்டாட்டங்கள்

யூலை 01ஆம் திகதி நிகழ்த்தப்பட்ட 95ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை 2017 ஆம் ஆண்டு இலங்கை முழுவதும் கூட்டுறவாளர்கள் மிகவும் உணர்ச்சி பூர்வமாகவும் மிகுந்த ஆர்வத்துடனும் கொண்டாடிருந்தனர்.தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் முன்னிலையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களிடையேயான கூட்டுறவு அழகன் மற்றும் கூட்டுறுவு அழகி,

கூட்டுறவு நட்சத்திரம் பேன்ற பலதரப்பட்ட போட்டிகள் நடாத்தப்பட்டு அவற்றில் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டிருந்தன. இவற்றுக்கு இணையாக 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியை அடிப்படையாக கொண்ட கூட்டுறவு துறைசார் வியாபார நடவடிக்கைகளை மதிப்பீடு செய்யப்பட்டு கூட்டுறவு தின நிகழ்வுகளின் போது அத்தகைய சங்கங்கள் கௌரவிக்கப்பட்டிருந்தனர். இறுதியாக 95ஆவது கூட்டுமுறவு தின நிகழ்வுகள் யூலை மாதம் 01ஆம் திகதி குருணாகல் மாவட்டததில் உள்ள மாளிகாப்பிட்டி விளையாட்டரங்கத்தில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் தலைமையில் நடைபொற்றிருந்தது. இதன்போது கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு துறையை மறுசீரமைக்கும் ''எதிர்கால நோக்கு 2020'' என்னும் செயற்திட்டத்திற்கான அனுமதியை ஜனாதிபதியவர்கள் வழங்கியிருந்தமை முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்பட்டது.

### ❖ கூட்டுறவு துறையை மறுசீரமைக்கும் ''எதிர்கால நோக்கு 2020''

இலங்கையின் கூட்டுறவுத்துறையை முழுமையாக மறுசீரமைக்கும் நோக்கத்தோடும் இலங்கையின் கூட்டுறவுத்துறைக்கு ஓர் புதிய அந்தஸ்த்தை பெற்றுக் கொடுக்கவும் என கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் வழிகாட்டல் மற்றும் நெறிப்படுத்தலின் கீழும் இலங்கையில் கூட்டுறவுதுறை இதுவரையில் ஈடுபடாத வர்த்தக செயற்பாடுகளில் புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் வகையிலும் தற்காலத்திற்க்கு எற்ற இற்றைப்படுத்தல்களடன் கூடிய மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்குமான திட்டங்களை உள்ளடக்கிய மேற்படி ''எதிர்கால நோக்கு 2020'' திட்டமானது ஜனாதிபதி அவர்களின் கரங்களினால் வெளியிட்டு வைக்கப்பட்டிருந்தது.

கூட்டுறவுத்துறையின் சட்ட வரையறைகள் மற்றும் கொள்கைகளை திருத்தியமைத்து தற்காலத்திற்க்கு எற்றவிதத்தில் இற்றைப்படுத்தலுக்குட்படுத்தி புதிய தகவல் தொழில்நுட்ப முறைகளுடாக கூட்டுறவுதுறையை ஒருங்கிணைத்து கொள்ளல் தொழில்நுட்ப உலகுக்கு எற்றவிதத்தில் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல்.மூலம் கூட்டுறவாளர்களின் தலைமைத்துவ ஆளுமையை கட்டிஎழுப்புதல் சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டங்களில் சமாதானம் மற்றம் நல்லிணக்கத்தை எற்படுத்தும் திட்டம் மற்றம் கூட்டுறவு உற்பத்திகளை பலதரப்பட்டதுறைகளுக்கு விஸ்தரிக்கும் திட்டங்கள் போன்றவற்றை இதனுடாக செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவுதுறை இலங்கையின் மூன்றாவது பலம் பொருந்திய துறையாக மேம்படுத்துவதற்கான உள்நோக்கம் கொண்டது. இதனடிப்படையில் செயற்படுத்த வேண்டிய அடிப்படைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ''எதிர்கால நோக்கு 2020'' என்னும் பெயருடன் குறித்த 2017 ஆம் ஆண்டு இத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டு வைக்கப்பட்டது விசேட நிகழ்வாகும.

### ❖ உணவு உற்பத்திக்கான தேசிய வேலைத்திட்டம்

காலநிலை மற்றும் வானிலையின் சடுதியான மற்றத்தின் காரணமாக நாட்டின் ஒருபகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கையில் நாட்டின் மற்றைய பகுதி வெள்ளத்தினாலும் மண்சரிவினாலும் பாதிக்கப்பட்டது இத்தகைய நிலமைகளின் காரணமாக எமது நாட்டின் உணவு உற்ப்பத்தியானது வெகுவாகப் பதிக்கப்பட்டது. இதன் பாதகமான விளைவுகள் மக்களை பாதிக்காத வகையில் வீட்டுத்தோட்டங்களில் பயன்தரு மரங்களை நடுவதற்க்கும் விதைகளை பகிர்ந்தளிப்பதற்குமான வேலைத்திட்டத்தை முன்னேடுக்க கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது விசேடமான அம்சமாக கருதலாம்.

### ❖ கூட்டுறவு கிராம கருத்திட்டம்

கூட்டுறவு கிராமம் நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்தின் கீழ் பொலநறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள கூட்டுறவுச் சபையின் வருமான மார்க்கங்களை வளம்படுத்தும்

நோக்கத்துடன் கூடிய மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமாக முன்னேடுப்பதற்க்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொலநறுவை மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் புடையான மட்டத்திலான கூட்டுறவு அமைப்பாக காணப்படுவது கூட்டுறவுச் சபையாகும். எனவே சகல அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர்களின் அறிவு சிந்தனை அனுபவம் / ஆற்றல் என்பவற்றை முன்னேற்றுவதற்காக துணைவிதியில் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுதல் என்பன இவ்வமைப்பின் தலையாய கடமையாகும். மாவட்டத்தின் அங்கத்தவர்கள் 150000 பேர்கள் மற்றும் ஊழியர்கள் 750 பேர்கள் வரையானவர்களுக்கான பிரதான பயிற்சி மத்திய நிலையமாக காணப்படுவது இன்நிறுவனமாகும். இவ்வமைப்பின் அங்கத்துவ சங்கங்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளது. இப்பணிப்பாளர் சபை ஊடாக செயற்பாடுகள் முன்னேடுக்கப்படுகின்றது. இலங்கையின் தேசிய கூட்டுறவுச் சபையானது நாட்டில் காணப்படுகின்ற தேசிய மட்டடத்தில் காணப்படுகின்ற முதன்மையான கூட்டுறவு அமைப்பாகும். இதன் அங்கததவர்கள் மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்பவை மாவட்ட மட்டடத்திலான கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து நியமிக்கப்பட்டவர்களாகும். இதேபோல் முறையானதும் பெருமளவிலுமான மனிதவளத்தை பயிற்சியளித்தலுக்காக இவ்வமைப்பை பயன்படுத்தக் கூடியதாக இயலுமை காணப்படுவதால் இப்பணியை சிறப்புற நிறைவேற்றுவதற்க்கு தேவையான கருத்தரங்க மண்டபம் ஒன்று அவசியமாக காணப்பட்டது எனவே இவ்வாண்டு அத்தகைய மண்டபம் ஒன்றை நிர்மானிக்க தேவையான நிதி உதவி வழங்குவதற்க்கு தேவையான நடவடிக்கைகளை எமது திணைக்களம் மேற்கொண்டிருந்து.

கூட்டுறவாளர்கள் மத்தில் புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் வெற்றிகளுக்கு காரணமாக இருந்த முலோபாய முறைமைகள் தொடர்பாக அறிவை பகிர்ந்து உற்பத்திதிறன் மிக்க பொருளாதார செயற்பாடுகளுக்கான பங்களிப்பபை வழங்குதல். கூட்டுறவுப் பிரஜையை கூட்டுறவாளர்களாக மற்றுவதற்க்காக சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகள், பண்புகளை அவர்களிடையே எற்படுத்துவதற்க்கு நடவடிக்கை எடுத்தல். கூட்டுறவுத் தலைமைத்துவத்தை இளைய தலைமுறையினர் பெற்றுக் கொள்ளகூடிய வகையில் அவர்களின் அற்றல்களை அபிவிருத்தி செய்தல்.இதன் பொருட்டு பொருத்தமான ஒத்துழைப்பை வழங்கி பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள மத்தியில் நற்பண்புகளை வளர்ப்பதற்கான தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்குதல். கூட்டுறவு ஊழியர்கள் மத்தியில் வியாபார அபிவிருத்திக்கு தேவையான அத்தியாவசியமான விடயம் அல்லது துறைகள் தொடர்பாக பயிற்சி வழங்குதல். அத்துடன் பிரஜைகளின் தலைமைத்துவத்துக்காக மகளீரின் தலைவர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும் அவர்களின் நேரடியான ஈடுபாட்டை உறுதிப்படுத்தும் நோக்கோடும் கூட்டுறவுக் கிராமம் நிர்மானிக்கும் கருத்திட்டத்தின் கீழ் வ/ப பொலன்னறுவை மாவட்ட கூட்டுறவுச் சபைக்கான கருத்தரங்க மண்டபம் நிர்மானிப்பதற்கான பூர்வாங்கவேலைகள் இவ்வருடத்தில் நிறைவு செய்யப்பட்டு நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

❖ **கைத்தொழில் மற்றும் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களைக் கட்டி எழுப்புதல் அல்லது மறுசீரமைத்தல்**

கூட்டுறவுத்துறையை மேம்படுத்தும் நோக்கத்துடன் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இத்திணைக்களத்தின் ஊடாக கைத்தொழில் மற்றும் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களை மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் வ/ப சுகாதார திணைக்களத்தின் கூட்டுறவு சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் ''சசெத்'' என்று அழைக்கப்படும் அச்சகப்பிரிவை நவீனமயப்படுத்தும் நோக்கத்தோடு நிதியுதவி வழங்கப்பட்டதுடன் வ/ப தூனகாக தென்னை மற்றும் தெங்குபொருள் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்திற்க்கு தேங்காய் சிரட்டை அகற்றுவதற்கான இயந்திரம் கொள்வனவு செய்ய நிதி உதவி வழங்கப்பட்டதும் இவ்வருடத்தில் நடந்தேறிய நிகழ்வுகளாகும்.

## 02. 10 திட்டமிடல் செயற்பாடுகள்

➢ **புள்ளிவிபரவியல் அறிக்கை**

இத்திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கம் சம்மேளனம் மற்றும் மாகாண திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கம் சம்மேளனங்களின் தகவல்கள் சேகரித்து தேசிய ரீதியில் ஒருமித்த புள்ளிவிபரவியல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இந்த அறிக்கை கூட்டுறவுாளர்களுக்கும் இத்துறைசார்பான ஆர்வமுடைய இலங்கை பிரஜைகள் என பலதரப்பட்டவர்களுக்கும் பயன்படக்கூடியதாக இருக்கும். 2016 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குரிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு ஒருமித்த புள்ளிவிபர அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தில் உள்ளது.

➢ **செயற்பாட்டுத் திட்டமிடல்**

2017ம் ஆண்டு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்பாட்டுத் திட்டமிடல் மற்றும் வினைத்திறன் மற்றும் வினைத்திறனை அதிகரிக்கும் பொருட்டு வருட ஆரம்பத்தில் சகல பிரிவுகளினதும் கடமை பொறுப்புக்களை ஒருங்கிணைத்து செயற்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கமைவாக 2017 ஆம் ஆண்டு காலபகுதியில் இத்திணைக்களத்தின் செயற்பாடுகள் திட்டமிட்டபடி சிறப்புற நடைமுறைபடுத்த பெருதவியாக அமைந்தது

## 02. 11 ஊடக செயற்பாடுகள

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக பிரிவின் மூலம் ஆற்றப்படுகின்ற பிரதான செயற்பாடாக கூட்டுறவுதுறை தொடர்பான தகவல்களையும் நிகழ்வுகளையும் கூட்டுறவுச் சமுகத்திற்கும் நாட்டுமக்களிற்கும் கிடைக்க செய்வதாகும்.

➢ **சமூபதீபணி சஞ்சிகை பத்திரிகை பிண்ணிணைப்பு.**

மேற்படி நோக்கத்தை நிறைவு செய்யும் பொருட்டு 2006ம் ஆண்டு முதல் சமூதீபணி சஞ்சகை பத்திரிகை பிண்ணிணைப்பாக வெளியிடப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிகிழமைகளில் சமூதீபணி சஞ்சிகையானது சிங்கள மொழி மூலம் 8 பக்கங்களுடன் தினமின பத்திரிகையின் பின்னிணைப்பாகவும் இதற்கு இணையாக தமிழில் மொழி மூல சஞ்சிகையானது ஒரு பக்கத்துடன் தினகரன் பத்திரிகையின் பின்னிணைப்பாகவும் வெளியிடப்பட்டு வருகின்றது.

இதற்காக எமது திணைக்களமானது அசோசியேற்றட் நியுஸ் பேப்பர் நிறுவனத்துடன் மிகநெருக்கமாக இணைந்து செயற்பட்டு வருகின்றது. மேற்படி பத்திரிகையில் நாடளாவியரீதியில் காணப்படும் கூட்டுறவுச் சங்கங்களில் சிறப்பாக செயற்படுகின்ற கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான விரிவான கட்டுரைகள் வெளியிடப்படுவதுடன் இலங்கையின் கூட்டுறவுத்துறையின் ஆரம்பம் தொடக்கம் அதன் வியாபிப்பு மற்றும் அவற்றின் பல தரப்பட்ட சமூக பணிகள் தொடர்பான கட்டுரைகள் சர்வதேச கூட்டுறவுதுறை தொடர்பான கட்டுரைகள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் அடங்கிய ஓர் முழுமையான சஞ்சிகையாக வெளியிடப்பட்டு வருகின்றது.

## 02. 12 தகவல் தொழில் நுட்ப பிரிவு

இலங்கையின் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தி வரும அரச முயற்சியாண்மை தனியார் முயற்சியாண்மை என்பவற்றுடன் பேட்டியிட கூடிய முயற்சியாண்மையாக கூட்டுறவு முயற்சியாண்மை கடந்த நூறு வருடங்களுக்கு கூடுதலாக தொழிற்பட்டு வருகின்றது எனினும் தற்போதைய கூட்டுறவுதுறை தொடர்பான வர்த்தக மற்றும் வர்த்தக அல்லாத தகவல்கள் திருத்தமாகவும் விரைவாகவும் பொற்றுக் கொள்வதில் உள்ள இடர்பாடுகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் தாடர்பான தீர்மானங்கள் மேற் கொள்ளம் போது கூட்டுறவுத்துறையானது உள்வாங்கப்படுவதில்லை. இக்குறைபாட்டை அடையாளம் கண்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமானது சுயமுகாமை செய்யகூடிய தகவல் தொகுதியின் கீழ் செயற்பட ஆரம்பித்த பின்னர் கூட்டுறவுத்துறையின் இத்தகவல் தொகுதியினை பயன்னுடுத்திக் கொள்வதன் ஊடாக முன்னர் குறிப்பிட்ட குறைபாடுகளை தவிர்த்துக்கொள்ளகூடியதாக இருப்பதுடன் வினைத்திறனுடைய கூட்டுறவுத்துறையை உருவாக்கும் குறிக்கோளுடன் தகவல் தொழில்நுட்பப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவில் சேவையாற்றுவதற்க்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்கள் 08 போர்கள் கொண்ட ஆளணிப்படை ஒன்று எமது திணைக்களத்தின் கடமைகளுக்கு அவசியம் என்பதால் அரச முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பின்னர் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்பாடுகள் சுய செயற்பாடுடைய கணணித் தொகுதியுடாக மேற்கொள்ளப்படுவதுடன் ஒட்டுமொத்த கூட்டுறவுத்துறையும் ஒருமித்த தகவல் தொகுதியுடன் தொடர்புபடுத்தப்படுவதற்குரிய கருத்திட்ட முன்மொழிவுகள் 2017 ஆம் அண்டு தயாரிக்கப்பட்டு அமைச்சின் செயலாளரின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டு பின்னர் அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் இக்கருத்திட்டம் தொடர்பான சாத்தியகூற்று ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்க்காக களனி பல்கலைக்கழகம் நியமிக்கப்ட்டுள்ளது.

தகவல் தொழில் நுட்ப பிரிவு எனப்படும் மேற்படி கருத்திட்டத்திற்க்கு புறம்பாக திணைக்களத்தின் இணையத்தளத்தை இற்றைப்படுத்திக் கொள்வதற்காக ஒவ்வொரு பிரிவில் இருந்தும் ஒருவர் வீதம் பிரதிநிதித்துவம் செய்து செயற்குழு ஒன்றை உருவாக்கப்பட்டு இசசெயற்குழுவின் தீர்மானத்தின் படியும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் அனுமதியுடனும் ஒரு வருடகாலம் இணையத்தளத்தின் பராமரிப்பு செயற்பாடுகளுக்காக **Procons infortech (Pvt) Ltd** நிறுவனத்துடன் உடன்படிக்கை ஒன்றை எற்படுத்தி கொள்ளப்பட்டுள்ளது. இதேபோல் இலங்கை அரச வலையமைப்பு கருத்திட்டத்தின் 2ஆம் கட்டத்தின் கீழ் இத்திணைக்களத்தின் அரச ஊழியர்கள் அனைவருக்கும் **WiFi** தொழில் நுட்பத்தின் ஊடாக இணைத்தினை பயன்படுத்தக்கூடிய வசதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளுத.

# அத்தியாயம் 03

## தேசிய மட்டத்திலான கூட்டுறவு அமைப்புகள்.

இந்த வருடத்தில் தேசிய ரீதியிலான கூட்டுறவு சம்மேளனங்கள் 13 செயற்பாட்டுடையதாக காணப்பட்டன. கீழ்க்காட்டப்படும் உயர் மட்ட கூட்டுறவு சம்மேளனங்களில் முகாமைத்துவ மற்றும் வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக வழிகாட்டல் மற்றும் அதற்காக ஒத்துழைப்பை வழங்குதல் அவற்றின் செயற்பாடு தொடர்பாக நேரடி கண்காணிப்பை மேற்கொள்ளப்பட்டது.

### 03. 1 இந்த வருடத்தில் செயற்பாடுடைய கூட்டுறவு சம்மேளனங்கள்

| | கூட்டுறவு சம்மேளனத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவு செய்த திகதி |
|---|---|---|---|
| 01 | வரையறுக்கப்பட்ட இலங்கை தெங்கு உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்க சம்மேளனம். | சி 1086 | 1942.04.01 |
| 02 | வரையறுக்கப்பட்ட இலங்கை தேசிய மீனவ கூட்டுறவு ஒன்றியம். | சி 1227 | 1952.02.02 |
| 03 | வரையறுக்கப்பட்ட இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை | சி 2490 | 1972.07.26 |
| 04 | வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு சந்தைப்படுத்தல் சம்மேளனம். | சி 2504 | 1973.03.01 |
| 05 | வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு கைத்தொழில் சம்மேளனம் | சி 2527 | 1974.03.19 |
| 06 | வரையறுக்கப்பட்ட இலங்கை சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் | சி 2651 | 1980.11.10 |
| 07 | வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு நெசவுக்கைத்தொழில் சம்மேளனம். | சி 2559 | 1981.09.02 |
| 08 | வரையறுக்கப்பட்ட இலங்கை சேவைகள் கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | சி 2689 | 1986.01.01 |
| 09 | வரையறுக்கப்பட்ட இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் | சமு 01 | 1989.09.15 |
| 10 | வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி மகா சம்மேளனம் | சமு 17 | 1997.12.15 |
| 11 | வரையறுக்கப்பட்ட இலங்கை தேயிலை உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சம்மேளனம் | சமு 29 | 2003.10.07 |
| 12 | வரையறுக்கப்பட்ட இலங்கை சிக்கனக் கடனுதவி சங்கங்களின் வள முகாமைத்துவ கூட்டுறவு மகா சம்மேளனம் | சமு 30 | 2005.11.21 |
| 13 | வரையறுக்கப்பட்ட இலங்கை மருத்துவச் சேவை கூட்டுறவுச் சங்க சம்மேளனம | சமு 33 | 2007.02.23 |

## 03. 2 இந்த வருடத்தில் செயற்பாடுடைய கூட்டுறவு சங்கங்கள்

திணைக்களத்தின் மேற்பார்வை / கண்காணிப்பின் மற்றும் வழிநடத்தலின் கீழ் நாடளாவிய ரீதியான 39 ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் 2017 ஆம் ஆண்டினுள் செயற்பட்டது. இக் கூட்டுறவு சங்கங்களை 02 முக்கிய தொகுதியாக வகைப்படுத்த முடியும.

- நாடளாவிய நிதிச் சேவைகள் கூட்டுறவுச் சங்கங்கள்
- நாடளாவிய உற்பத்தி மற்றும் ஏனைய சேவைகள் கூட்டுறவுச் சங்கங்கள்

## 03. 2.1 நாடளாவிய நிதிச் சேவைகள் கூட்டுறவுச் சங்கங்கள்

பெரும்பாலான அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஊழியர்களை உறுப்பினராக கொண்டு சிக்கன கடனுதவியை செயற்பாட்டை மேற்கொள்ளுகின்ற சங்கங்கள் ஆகும்

இந்த கூட்டுறவு சங்கங்களின் பிரதான செயற்பாடுகள்

- ❖ சங்கத்தில் அங்கத்துவத்தை வகிக்கும் நிறுவன ஊழியர்களின சேமிப்புகளைத் திரட்டுதல்.
- ❖ உறுப்பினர்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல்
- ❖ அங்கத்துவத்தின் நலன்புரிக்கு வழியமைத்தல். (மரண நிதியுதவி, புலமைப்பரிசில் நிதியுதவி, மருத்துவ நிதியுதவி, நுகர்வு மற்றும் ஏனைய அன்னியோன்ய நிதியுதவி முறை போன்றவற்றை அபிவிருத்தி செய்து பெணுதல்)
- ❖ ஏனைய சேவைகளை வழங்குதல்( மடங்கள், விடுமுறைத் தங்குமிடங்கள், ஈட்டுச் சேவை, அச்சக வசதிகள், காப்புறுதி முகவர் சேவை)

## நாடளாவிய ரீதியிலான நிறுவனங்களின் நிதிச் சேவைகள் கூட்டுறவுச் சங்கம் 2017

| | கூட்டுறவு சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவு செய்த திகதி |
|---|---|---|---|
| 01 | வ/ப சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பரஸ்பரமான ஊழியர் செமலாப நிதிய கூட்டுறவுச் சங்கம் | சி 473 | 1928.03.15 |
| 02 | வ/ப தபால் மற்றும் ரெலிகொம் ஊழியர் கூட்டுறவு வங்கி சங்கம் | சி 503 | 1928.12.07 |
| 03 | வ/ப கல்விச் செவையை சேர்ந்தவர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கம் | சி 736 | 1930.11.01 |
| 04 | வ/ப இலங்கை சுகாதார பணியாட்றொகுதி அபிவிருததி சேவைகள் ச.ன.ச | சி 744 | 1930.11.10 |
| 05 | வ/ப இலங்கை சுகாதார திணைக்களத்தின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் கொடுக்கல்வாங்கல் பற்றிய சங்கம் | சி 290 | 1938.03.30 |
| 06 | வ/ப இலங்கை மக்கள் சுகாதார பரிசோதகர்களின் சிக்கன, கொடுக்கல்வாங்கல் மற்றும் நலனோம்புகை கூட்டுறவுச் சங்கம் | சி 303 | 1938.04.28 |
| 07 | வ/ப பதிவாளர் நாயக திணைக்கத்தின் ஊழியர்களின் சிக்கன மற்றும் கடன் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | சி 255 | 1939.10.20 |
| 08 | வ/ப இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்களின் நலனோம்புகை கூட்டுறவுச் சங்கம் | சி 1046 | 1943.11.23 |
| 09 | வ/ப புகையிரத நிலையத் தலைவர்களின் மற்றும் எழுதுநர்களின் கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு மற்றும் கடன் வழங்கும் சங்கம். | சி 1649 | 1949.03.29 |
| 10 | வ/ப புகையிரத வீதி மற்றும் வேலை திணைக்களததின் சிக்கன சேமிப்ப கூட்டுறவுச் சங்கம் | சி 1707 | 1950.08.30 |
| 11 | வ/ப சுகாதார சேவைகள் நிதி சேமிப்ப மற்றும் கடன் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | சி 2233 | 1959.11.19 |
| 12 | வ/ப போக்குவரத்து சபை ஊழியர் சிக்கன மற்றும் நலநோம்புகை கூட்டுறவுச் சங்கம். | கே.ஈ 299 | 1960.05.26 |
| 13 | வ/ப மக்கள் வங்கி ஊழியர் கூட்டுறவுச் சங்கம் | சி 2266 | 1962.02.10 |
| 14 | வ/ப அரச சேவைகள் கூட்டுறவு கடன் வழங்கல் மற்றும சேமிப்பு சங்கம் | சி 326 | 1962.02.10 |
| 15 | வ/ப சதொச ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன, நலநோம்புனை மற்றும் கடன் வழங்கும் சங்கம் | சி 2294 | 1963.01.26 |
| 16 | வ/ப திணைக்கள துறைசார் உததியோகத்தர்களின் சிக்கன மற்றும் கடன் கொடுக்கல்வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | சி 2357 | 1962.10.26 |
| 17 | வ/ப பிரவுன் கூட்டு கைத்தொழில் பொது சேவைகள் சிக்கன மற்றும் கடன் கொடுக்கல்வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | சி 2383 | 1967.10.01 |
| 18 | வ/ப இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபன சிக்கன மற்றும் கடன் கொடுக்கல்வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | சி 2402 | 1968.08.29 |
| 19 | வ/ப உள்நாட்டு இறைவரித் திணைக்கள சேமிப்ப கூட்டுறவுச் சங்கம் | சி 931 | 1973.07.25 |
| 20 | வ/ப இலங்கை துறைமுக அதிகார சைபயின் ஊழியர் கூட்டுறவு வங்கி | சமு 02 | 1989.12.20 |
| 21 | வ/ப நில அளவை திணைக்களத்தின் நில அளவை உதவியாளர்களின் சிக்கன மற்றும் கடன் கொடுக்கல்வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | சமு 10 | 1994.02.09 |
| 22 | வ/ப இலங்கை பெயண்களின் அபிவிருத்தி சேவைகள் கூட்டுறவுச் சங்கம் | சமு 18 | 1998.04.06 |
| 23 | வ/ப சனச அபிவிருத்தி வங்கி ஊழியர்கள் சிக்கன மற்றும் கடன் கொடுக்கல்வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | சமு 22 | 2000.06.26 |
| 24 | வ/ப சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் கமத்தொழில் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் மற்றும் கமத்தொழில் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் கொடுக்கல்வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | சமு 25 | 2001.05.05 |
| 25 | வரையறுக்கப்படட நீர் வழங்கல் சபை ஊழியர்களின் சிக்கன மற்றும் கடன் வழங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | சமு 31 | 2006.01.03 |
| 26 | வரையறுக்கப்பட்ட அரச சேவை பட்டதாரிகள் சிக்கன மற்றும் கடன் கொடுக்கல்வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் | சமு 32 | 2006.11.29 |

| | | | |
|---|---|---|---|
| 27 | வ/ப பிரஜாசக்தி இளைஞர்கள் வலுவுட்டல் கூட்டுறவு சங்கம் | சமு 43 | 2014.10.02 |
| 28 | வ/ப இலங்கை அரச முகாமைத்துவ உதவியாளர்களின் சேவையில் உள்ளவர்களின் சிக்கன கடனுதவி மற்றும் அபிவிருத்தி சேவைகள் கூட்டுறவு சங்கம் | சமு 44 | 2014.08.12 |
| 29 | வ/ப விவசாய மற்றும் மற்றும் சூழலியலாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | சமு 46 | 2016.02.08 |
| 30 | வ/ப இலங்கை முயற்சியாண்மையளர்களின் அபிவிருத்திக கூட்டுறவுச் சங்கம் | சமு 47 | 2016.02.08 |
| 31 | வ/ப இலங்கை தொழில் நுட்ப அபிவிருத்தி தேசிய கூட்டுறவு சங்கம் | சமு 48 | 2016.07.02 |
| 32 | வ/ப தேசிய பயிற்சியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | சமு 51 | 2016.09.28 |

## 03. 2.2 நாடளாவிய ரீதியிலான உற்பத்தி மற்றும் ஏனைய சேவை வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்.

இநுகர்வோரின் தேவைக்கேற்பவும் அவசியமான உற்பத்தி மற்றும் சேவைகளை வழங்கும் ஆரம்ப கூட்டுறவு சங்கங்கள் நாடளாவிய ரீதியிலான உற்பத்தி மற்றும் ஏனைய சேவை வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களாக அடையளம் காணபட்டுள்ளது

இந்த கூட்டுறவு சங்கங்களின் பிரதான செயற்பாடுகள்

- ❖ உறுப்பினர்களின் உற்பத்திகளை கொள்வனவு செய்தல
- ❖ உற்பத்திகள் மற்றும் சேவை வழங்கல் தெடர்பான அங்கத்துவர்களுக்கு தேவையான மூலப்பொருட்களை வழங்குதல
- ❖ உறுப்பினர்களின் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை அறிமுகம் செய்தல் சந்தைவாய்ப்பை விரிவுபடுத்தல்
- ❖ உறுப்பினர்களிற்கான தொழல் நுட்பமேம்பாடு மற்றும் புதிய தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்தல்

| | சங்கத்தின் பெயர் | பதிவு இல. | பதியப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | வ/ப அகில இலங்கை அச்சக உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம். | சி 2280 | 1962.08.10 |
| 02 | வ/ப அகில இலங்கை விசித்திரப்பயிர்கள் தொங்கு பயிர்ச் செய்கையாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | சி 2409 | 1969.11.28 |
| 03 | வ/ப அகில இலங்கை அப்பியாக புத்தக உற்பத்தியாளாகள் கூட்டுறவுச் சங்கம். | சமு 03 | 1990.03.07 |
| 04 | வ/ப இலங்கை இழுவலை உரிமையாளர்களின் கூட்டுறவுச் சங்கம். | சமு 07 | 1992.01.29 |
| 05 | வ/ப தோட்டத் தொழிலாளர்களின் வீடமைப்பு சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். | சமு 28 | 2003.07.11 |
| 06 | வ/ப அகில இலங்கை சிறிய மற்றும் மத்தியஅளவிலான விதைகள் களஞ்சிய முயற்சியாண்மையாளர்களின் அபிவிருததிக் கூட்டுறவுச் சங்கம். | சமு 34 | 2007.03.07 |
| 07 | வ/ப அகில இலங்கை விவசாய கூட்டுறவுச் சங்கம். | சமு 41 | 2010.01.05 |
| 08 | வ/ப இலங்கை துறைமுக கப்பல் சேவை வழங்கும் கூட்டுறவுச் சங்கம். | சமு 36 | 2011.07.07 |
| 09 | வ/ப வீடமைப்பு மற்றும் ஆதன அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம். | சமு 39 | 2011.07.07 |
| 10 | வ/ப ரஜரட்ட பல்கலைக்கழக கூட்டுறவு சங்கம். | சமு 40 | 2011.08.28 |
| 11 | வ/ப பால் உற்பத்தியாளர்களின் தேசிய கூட்டுறவு சங்கம். | சமு 45 | 2014.10.02 |

කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍යාංශය
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව

දුර : 0112-478374, 0112-478375    ෆැක්ස් : 0112-478386
වෙබ් : www.coop.gov.lk    ඊ-මේල් : dcoopdev@sltnet.lk